CHURCH OF THE
HOLY FAMILY
KAJANG

கிறிஸ்துவில் இனிய சகோதர சகோதரிகளே!

## 1.0 மீட்பிற்கான காலம்

வழிபாட்டு ஆண்டின் பருவங்கள் கத்தோலிக்கர்களாகிய நம் வாழ்வில் வெவ்வேறு காலக்கட்டத்தின் வெளிப்பாட்டு வடிவத்தையும் அமைப்பையும் தருகின்றன. இந்தப் பருவங்கள் நம் மீட்பைக் கொண்டாடுகின்றன. ஒவ்வொன்றும் தனித்துவமான மற்றும் அழகான முறையில் இயேசு கிறிஸ்துவின் மறைபொருளை ஆண்டு முழுவதும் நம் நடுவில் உயிருடன் எழுப்புகின்றன. அவரே ஆல்பாவும் ஒமேகாவும், ஆரம்பமும் முடிவும், மேலும் “எல்லா காலமும் எல்லா யுகங்களும் அவருக்கே உரியது; எல்லா மாட்சியும் ஆட்சியும் இப்போதும் என்றென்றும் அவருடையது, ஆமென்” என ஒலிக்கிறது. (பாஸ்கா திருவிழிப்பு மெழுகுத்திரியில் உள்ள அடையாளங்களைக் குறிக்கும்போது அருள்பணியாளர் பயன்படுத்தும் வார்த்தைகள்).

## 2.0 தவக்காலத்தின் நோக்கம்.

தவக்காலம் இரட்டிப்பு நோக்கம் கொண்டது. முதல் நோக்கமானது பாஸ்கா திருவிழிப்பில் ஆயத்த கிறிஸ்தவர்களின் திருமுழுக்கிற்கான பயணம் (அல்லது திருமுழுக்குப் பெற்றவர்கள் திருமுழுக்கு வாக்குறுதியைப் புதுப்பிப்பது). இரண்டாவது நோக்கமானது தவம் வழியாக நம்மை தூய்மை படுத்தும் பணி, இந்த 40 நாட்கள் தவக்காலத்தில் நடைபெறும். நம் மரபுகளின் ஒழுக்கங்களான இறைவேண்டல், நோன்பு மற்றும் தர்மம் ஆகியவை மனம் திரும்புதல், மனமாற்றம் மற்றும் ஞானவொளி பெறும் காலத்தில் இந்த இரண்டு நோக்கங்களை அடைய உறுதியாய் அமைகிறது.

## 3.0 புகுமுக அருளடையாளங்கள்

இவ்வாண்டு, நாம் மொத்தம் 28 வேட்பாளர்களுடன் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம். அவர்கள் மூன்று புகுமுக அருளடையாளங்களைப் பெறுவார்கள். இருவர் திருமுழக்குப் பெற்ற கிறிஸ்தவர்கள் நம் கத்தோலிக்க திருஅவையில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். மற்றும் 4 பெரியவர்கள் பாஸ்கா திருவிழிப்பில் உறுதிப்பூசுதல் பெற தயாராக உள்ளவர்கள். நமது நல்லுறவு, ஆதரவு மற்றும் மன்றாட்டுகளுடன் இவர்களோடு இணைந்திருப்போம். புகுமுக அருளடையாளங்களைப் பெற தங்களைத் தயாரிக்கும் இந்த வேட்பாளர்களுடன் ஒன்றிப்பு மற்றும் ஒற்றுமையில் ஒன்றிணையவில்லை என்றால் நமது தவக்கால பயணம் பொருளற்றதாகிவிடும்.

## 4.0 தவக்கால நடவடிக்கைகள்

இந்த தவக்காலத்தின் போது, புனித வாரம் வரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சிலுவை பாதை பாரம்பரிய பக்தி முயற்சியைத் தொடர்வீர்கள் என எதிர்ப்பார்க்கிறோம். உடல்நலக் காரணங்களால் நம்மோடு நேரடியாக இந்த பக்தி முயற்சியில் கலந்துகொள்ள முடியாதவர்கள், நிகழ்நிலை (online) வழி பங்கேற்கலாம்.
நாங்கள், மூன்று அருள்பணியாளர்களும் நமது பங்கிற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பெரும் நோயாளிகளுக்கு நோயிற்பூசுதலையும் நற்கருணையையும் கொண்டு வரவுள்ளதால் பாதுகாப்பான வழிமுறைகளைப் பின்பற்ற விரும்புகிறோம்.

CHURCH OF THE
HOLY FAMILY
— KAJANG —

இறுதியாக, இந்த தொற்றுநோய் காலத்தின் போது அதிக எண்ணிக்கையிலான மக்கள் ஒப்புரவு சடங்கிற்கு வருவதும், அதிகமான அருள்பணியாளர்கள் பாவ அறிக்கைகளைக் கேட்க பங்கிற்கு வருவதும் சாத்தியமற்றது என்ற நிலையைக் கருத்தில் கொண்டு, நாங்கள் மூன்று அருள்பணியாளர்களும் சனிக்கிழமை காலை ஆலயத்தில் ஒப்புரவு சடங்கை நிறைவேற்றவும் பாவ மன்னிப்பு வழங்கவும் உள்ளோம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பாஸ்கா பெருவிழாவுக்கு சிறந்த தயாரிப்பு செய்ய வேண்டுகிறோம்.

**5.0 தியாகமும் பாதுகாப்பும்**

இந்த தொற்று நோய் தொடங்கி சுமார் 2 வருடங்கள் ஆகிவிட்டது. SOPயை பின்பற்றுவதற்கு விதிக்கப்பட்ட விதிமுறைகளால் சோர்ந்தடைந்திருப்பதை புரிந்துகொள்ள முடிகிறது. இதன் விளைவாக,
தொற்று நோய்க்கு முன்னர் அனுபவித்த சுதந்திர நிலைக்கு திரும்புவதற்கு நாம் அனைவரும் ஏங்குகிறோம்.
உணவுக்கூடங்களில், வணிக வளாகங்களில் மற்றும் விமானங்களில் காணப்படும் தளர்வான SOP விதிமுறைகளை பின்பற்றும் முறையை நம் ஆலயத்திலும் பின்பற்றலாம் என்று ஒரு விவாதம் வைக்கப்படுகிறத. .கத்தோலிக்கராகிய நாம் சமுதாயத்தில் காணப்படும் பொது வழக்கங்களோடு ஒன்றித்து வாழும் மக்களாக அழைக்க படுகிறோம் . ஆனால், உண்மையில் அவர்களை போல் " நாமும்" வாழ வேண்டும் என்ற விவாதம் பொறாமை அடையாளமாகவும் மற்றும் மற்றவர்களின் வாழ்க்கை முறைகளை நகலாக பின்பற்றும் மக்கள் எனும் அடையாளமாகவும் கருதப்படுகிறது. ஆதலால் இந்த செயல் விவேகமற்றதாக கருதப்படுகிறது.
ஆனால் கத்தோலிக்கர்களாகிய நாம், கிறிஸ்துவைப் பின்பற்றி சுய மறுப்பு மற்றும் தியாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய மிக உயர்வான வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளோம். விழிப்புணர்வு மற்றும் SOP கட்டுப்பாடுகளுடன் இணங்குதல் குறித்து, சமூகம் மற்றும் நம் அன்புக்குரியவர்களின் நலனுக்காகவே அவ்வாறு செய்கிறோம் என்ற அதே உணர்வில் கட்டுப்பாட்டு விதிமுறைகளைப் பிற்பற்றுவோம்.

**6.0 புதுப்பித்தலுக்கான ஒரு வசந்த காலம்**

திருஅவை நமக்கு நாற்பது நாள்கள் நோன்பை (தவக்காலத்தில்), அத்தோடு தொடர்ந்து ஐம்பது நாள்கள் பாஸ்கா விருந்தை கொடுக்கிறது. ஏனென்றால் கிறிஸ்தவ வாழ்க்கை என்பது துக்கத்தை விட மகிழ்ச்சியாக வாழ்வதாகும், பாவத்தை விட இரக்கத்தைப் பற்றியதுமாகும். இந்த காரணத்திற்காக, தவக்காலம் என்பது வாழ்க்கையின் அனைத்து இன்பங்களையும் விட்டுக்கொடுக்கும் ஒரு நிதானமான அனுபவமாக கருதப்படாமல், அருளைப் பெறுவதற்கும், நமது பழைய வாழ்வை மறுத்து புதிய வாழ்க்கையைக் கொண்டுவரும் வசந்த காலத்தைக் கொண்டாடுவதற்குமாக அமைய வேண்டும்.
இந்த தவக்காலத்தில் நாம் கிறிஸ்துவைப் பின்பற்றி அவரோடு நடக்கும்போது, கிறிஸ்துவின் மீது நம் பார்வையைப் பதிய வைப்போம். ஏனெனில் அவர் ஒருவரே "நம் மனக்கண்களை ஒளிரச் செய்ய முடியும், இதனால் அவருடைய அழைப்பு நமக்கு என்ன எதிர்நோக்கு வைத்திருக்கிறது என்பதை நாம் பார்க்கலாம்" (எபேசியர் 1:17. -18).
இந்த தவக்காலம் உங்களுக்கு ஆசீவதிக்கப்பட்ட காலமாக அமையட்டும்

உங்கள் அன்புநிறை மேய்ப்பர்கள்,
அருள்பியாளர்கள் மைக்கல் சுவா, பிலிக் சுவா & பொனவெஞ்சர் இராயப்பன்
02.03.2022